கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கும்பகோணம்.

(சிலை திருட்டு வழக்கு சிறப்பு நீதிமன்றம், கும்பகோணம்)

முன்னிலை, திரு G. மணிகண்டராஜா, பி.ஏ., பி.எல்.,

கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்/ சிலை திருட்டு வழக்கு சிறப்பு நீதிபதி,

கும்பகோணம்.

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 03ம் நாள், புதன்கிழமை

**CrlMP No. 59/2026**

**E-CrlMP No. 9/2026**

**Cr. No. 70/2018**

S. சுந்தரராஜன், வயது 33/2026, த/பெ. சத்தியமூர்த்தி, செயல் அலுவலர், அ/மி. பசுபதீஸ்வரர் திருக்கோவில், பந்தநல்லூர், திருவிடைமருதூர் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம், நிரந்தர முகவரி

எண். 59பி, தணிக்கை நகர், திருநகர், மதுரை – 625 006. ...மனுதாரார்.

எதிராக

அரசு சார்பாக காவல் ஆய்வாளர், பந்தநல்லூர்,

குற்ற எண்.70/2018 சிலை திருட்டு தடுப்பு பிரிவு , கும்பகோணம் சரகம்.

.....எதிர் மனுதாரார்/குற்றமுறையீட்டாளர்.

இந்த மனு என் முன்பு 03.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் திரு. S. ராஜசேகரன் மற்றும் திரு. T. சுந்தவடிவேலு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி. A. அன்னலெட்சுமி அவர்கள் ஆஜராகிய நிலையில், வழக்கு கோப்புகளையும், இருதரப்பு வாதுரைகளையும் கவனமான பரிசீலித்து இம்மனுவில் இன்று கீழ்கண்டவாறு பிறப்பித்த

**ஆணையுரை**

1) மனுதாரருக்கு மனுவில் குறிப்பிட்டுள்ள பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் உலோக சிலையை இடைக்கால வசமாக மனுதாரரர்/ செயல் அலுவலரிடம் ஒப்படைக்க கோரி இம்மனு பிவு 497 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3/6/26

2) பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் உலோக சிலை திருடப்பட்டுவிட்டது என்றும் இது சம்மந்தமாக பந்தநல்லூர் காவல் நிலையத்தில் மேற்படி சிலையை திருடிய நபர்களிடமிருந்து மீட்டு அந்த சிலையானது வழக்கில் தடயப்பொருளாக கைப்பற்றப்பட்டு CP No. 61/2021 என்ற எண்ணில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்கண்ட சிலையானது அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலில் அன்றாட பராமரிப்பிலும் பூஜையிலும் இருந்து வந்தது என்றும் தற்பொழுது பொது மக்கள் வழிபாட்டிற்கும், பூஜைக்கும் தேவைப்படுகிறது என்றும் மனுதாரர் வசம் மேற்கண்ட சிலையை இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர் மனுதாரர் தரப்பில் பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலில் சிலைகள் பாதுகாப்பு அருங்காட்சியகம் உள்ளது என்றும் அங்கு கீழமணக்குடி அருள்மிகு விஸ்வநாதர் கோவிலுக்கு சொந்தமான சிலைகள் இருந்தது என்றும் அங்கு சிலைகள் காணவில்லை என்று ஆய்வு செய்யும்போது சண்டிகேஸ்வரர் சிலை இருந்தது என்றும் அந்த சிலையானது கீழமணக்குடி கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் சிலை இல்லை என்றும் கீழமணக்குடி கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் சிலை இருந்த இடத்தில் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் சிலை வைக்கப்பட்டு அந்த சிலை திருடப்பட்டதாக தெரியவந்தது என்றும் அது சம்பந்தப்பட்ட வழக்கு குற்ற வழக்கு எண். 4/2017ல் பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும் எனவே இவ்வழக்கு சொத்தான சண்டிகேஸ்வரர் சிலையை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பதற்கு ஆட்சேபனை உள்ளதாக பதிலுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) பசுபதீஸ்வரர் கோவிலுக்கு குடமுழுக்கு விரைவில் நடைபெற இருப்பதாகவும் சண்டிகேஸ்வரர் உலோக திருமேனிக்கு உரிய பூஜை செய்வது அவசியம் என்றும் கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். கீழமணக்குடி கோவிலுக்கு சொந்தமான சிலைகள் திருடப்பட்டு குற்ற வழக்கு எண். 4/2017 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குற்ற எண். 70/2018 வழக்கும் ஒருசேர விசாரணையில் உள்ளது என்றும் சிலையை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் விசாரணை பாதிக்கப்படும் என்றும் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வாதிட்டார்.

5) குற்ற எண். 70/2018ல் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான சண்டிகேஸ்வரர் சிலை கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு வழக்கு சொத்து எண். 61/2021ல் உலோக சிலைகள் பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தானது பந்தநல்லூர் அருள்மிகு பசுபதீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்பதில் எவ்வித புகாரும் இல்லை. வழக்கு சொத்தானது 2018ல் கைப்பற்றப்பட்டுள்ளது. மனுதாரர் வசம் உலோகதிருமேனியானது பூஜைக்காக ஒப்படைக்கப்படும் பட்சத்தில் எவ்வித விசாரணையும் தடைபடாது. தினந்தோறும் பூஜை புனஸ்காரங்கள் செய்யப்பட்ட திருமேனியை பாதுகாப்பு மையத்தில் வைத்து பூட்டி வைத்திருப்பது உகந்தது அல்ல. எனவே வழக்கு விசாரணை முடியும் வரை சண்டிகேஸ்வரர் உலோக திருமேனியானது மனுதாரர் வசம் இடைக்கால வசமாக நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6) மனுதாரிடம் சண்டிகேஸ்வரர் உலோக திருமேனியை பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இடைக்கால வசம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள் பின்வருமாறு</u>

1) மனுதாரர் C.P. No. 61/2021-ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சண்டிகேஸ்வரர் உலோக திருமேனியின் முன் பகுதியும் பின்பக்கமும் நன்கு தெரியும் வண்ணம் கலர் புகைப்படங்கள் எடுத்து மேற்படி புகைப்படங்களை அதற்குரிய சிடி யுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

2) மனுதாரர் தரப்பில் ஆஜர் செய்யப்படும் மேற்படி புகைப்படங்களில் மனுதாரரும் பந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண் 70/2018 வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும், இந்நீதிமன்ற நடுவரின் எழுத்தர் முன்பாக கையொப்பமிட வேண்டும். அதற்கு கீழ் அதனை ஒப்புகை செய்யும் விதமாக இந்நீதிமன்ற நடுவரின் எழுத்தர் கையொப்பமிட வேண்டும்.

3) மனுதாரர் ரூ. 1,00,000/- க்கு சொந்த பிணைமுறி பத்திரம் எழுதித்தர வேண்டும். மனுதாரர் மனு சொத்தை மேலே குறிப்பிட்டுள்ள கோவிலில் வழிபாட்டிற்கு வைத்து முறையாக பராமரிக்க வேண்டும்.

4) இந்நீதிமன்றம் வேண்டும் பொழுது மனுதாரர் C.P. No. 61/2021-ல் வழக்கு சொத்தை ஆஜர் செய்ய வேண்டும். அதனை விற்கவோ உருமாற்றம் செய்யவோ கூடாது.

5) நீதிமன்ற படிவம் 82ன்படி மனுதாரர் பத்திரநாமா எழுதிக்கொடுக்க வேண்டும்.

தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 03-ம் நாள் பகரப்பட்டது.

கூடுதல் நான்காவது நீதித்துறை நடுவர்
சிலை திருட்டு வழக்கு சிறப்பு நீதிபதி,
கும்பகோணம்.